**O.S. 112/2017 , 31.03.2022 11.10 am - 11.20 am**

**வா.சா.1, செந்தில்குமார், த/பெ.லேட்.நந்தகோபால், வயது 39**

**முதல் விசாரணை:-**

திருப்பத்தூர் மாவட்டம், (முன்னாள் வேலூர் மாவட்டம்), நாட்றம்பள்ளி தாலுக்கா, மல்லப்பள்ளி கிராமம் மற்றும் அஞ்சல், கணிக்காரச்சி வட்டம், கதவு எண்.2/2013-1ல் வசிக்கும் இந்து லேட்.நந்தகோபால் குமாரர் சுமார் 39 வயதுள்ள செந்தில்குமார் ஆகிய நான் சத்திய பிரமாணமாய் கூறுவதாவது.

சத்தியமாக சொல்கிறேன். என்னுடைய பிரமாண பத்திர்க்கையில் உள்ள சங்கதிகள் எனக்கு தெரியும். அதிலுள்ள கையொப்பம் என்னுடையது தான். 05.09.2005 தேதியிட்ட 1ம் வாதி பெயரிலுள்ள கிரையப்பத்திரத்தின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.1 ஆகும். 30.11.2009 தேதியிட்ட 1ம் வாதி பெயரிலுள்ள கிரையப்பத்திரத்தின் அசல் வா.சா.ஆ.2 ஆகும். 18.12.2009 தேதியிட்ட 1ம் வாதியின் பெயரிலான திருத்தல் பத்திரம் வா.சா.ஆ.3 ஆகும். 1ம் வாதி பெயரிலுள்ள பட்டா வா.சா.ஆ.4 ஆகும். 1423-ற்கான 1ம் வாதி பெயரிலுள்ள கிஸ்து ரசீது வா.சா.ஆ.5 ஆகும். அசல் வழககு எண்.15/2010-ற்கான வழக்குரையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.6 ஆகும். மேற்படி வழக்கிற்கான தீர்ப்பின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.7 ஆகும் (1ம் பிரதிவாதி தரப்பு வழக்கறிஞர் அந்த ஆவணம் சான்றிட்ட நகல் அல்ல என்று ஆட்சேபனை செய்தார். ஆனால், அந்த ஆவணத்தின் கடைசி பக்கத்தில் கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருப்பத்தூரில் குறியீடு செய்யப்பட்டுள்ளதாக உள்ளது. அதனடிப்படையில் ஆவணம் குறியீடு செய்யப்படுகிறது). 22.07.2014 தேதியிட்ட நாட்றம்பள்ளி காவல் நிலையத்தில் கொடுத்த புகார் ஏற்பு சான்றிதழ் வா.சா.ஆ.8 ஆகும். 18.08.2016 தேதியிட்ட 1ம் வாதி பிரதிவாதிக்கு அளித்த அறிவிப்பின் அலுவலக நகல் வா.சா.ஆ.9 ஆகும். 22.09.2016 தேதியிட்ட பிரதிவாதிகள் வாதிகளுக்கு வழக்கறிஞர் மூலம் அனுப்பிய பதில் அறிவிப்பு வா.சா.ஆ.10 ஆகும். அசல் வழக்கு எண்.322/1986 வழக்கிற்கான தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.11 ஆகும். வழக்கு சொத்து குறித்து 27 ஆண்டுகளுக்கான வில்லங்க சான்றிதழ் வா.சா.ஆ.12 ஆகும். 24.12.2009ல் வழங்கப்பட்ட வழக்கு சொத்திற்கான பட்டா வா.சா.ஆ.13 ஆகும். 05.02.2015 தேதியிட்ட அசல் வழக்கு எண்.15/2010-ற்கான தீர்ப்பாணையின் சான்றிட்ட நகல் வா.சா.ஆ.14 ஆகும். 14.01.2014ல் வழங்கப்பட்ட 1ம் வாதியின் பெயரிலுள்ள கிஸ்து ரசீது வா.சா.ஆ.15 ஆகும். 14.02.2022 தேதியிட்ட வழக்கு சொத்திற்கான கணினி பட்டா வா.சா.ஆ.16 ஆகும். தாவாப்படி தீர்ப்பாகும்படி கேட்டுக்கொள்கிறேன்.

பிரதிவாதிகள் தரப்பு வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்தி வைக்கப்படுகிறது.